## டிஜிட்டல் பொருளாதார அமைச்சு
## ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்

# ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாரா தொகுதி 2 சேவை வகுதியின் இரு மொழி எழுதுநர் பதவியின் தரம் III க்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத - தொகுதி 2 சேவை வகுதியின் தரம் III எழுதுநர் பதவியில் நிலவும் 15 வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பு முறை**:

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் நடத்தப்படும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய அந்தப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய ஆகக் கு குறைந்த புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களில் முறையே ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்கப்படுவர்.

02. **தகைமைகள்:**

**2.1 கல்வித் தகைமைகள்:**

(அ) சிங்களம் / தமிழ் / ஆங்கிலம், கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில் பின்வரும் **ஒரு தகைமையைப்** பூர்த்திசெய்திருத்தல்.

(i) விண்ணப்பதாரியின் ஊடக மொழி சிங்களம் எனின் இரண்டாம் மொழி தமிழில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

(ii) விண்ணப்பதாரியின் ஊடக மொழி தமிழ் எனின் இரண்டாம் மொழி சிங்களத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

(iii) விண்ணப்பதாரியின் ஊடக மொழி ஆங்கிலம் எனின், சிங்கள மொழி / மொழியும் இலக்கியமும் அல்லது தமிழ் மொழி / மொழியும் இலக்கியமும் பாடத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**மற்றும்**

(இ) கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர் தரம்) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு (01) பாடத்தில் (சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) சித்தி பெற்றிருத்தல்.

**2.2 உடற் தகைமைகள்:**

சகல விண்ணப்பதாரிளும் இலங்கையின் எப்பததத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ரீதியாக தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2.3 **வேறு தகைமைகள்:**

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** I : அடிப்படைக் கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களை (க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரம்) விண்ணப்பதாரி உறுதிப்படுத்தி பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

03. **வயதெல்லை:**

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

04. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்**

I. இந்தப் பதவி நிரந்தரமானது. ஒய்வூதிய உரித்துடையது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

II. நியமனம் 03 வருட தகுதிகூர்நிலைக் காலத்திற்கு உட்பட்டது. தரம் III க்கு ஆட்சேர்ப்புச் செய்து 03 வருடங்களுக்கு முன்னர் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

III. 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதற்கு இடைதேர்வான சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய உரிய மற்றைய அரசகரும மொழியில் / அரசகரும மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும் அரசாங்க நிதி

ஒழுங்கு விதிகளுக்கும் அரசாங்கத்தின் வேறு ஒழங்கு விதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் அவற்றுக்கு ஏற்புடையதாக அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்களுக்கும் தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

V. விண்ணப்பிக்கும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. தாங்கள் நியமனம் பெறுவதற்கு தகைமைப்பெறும் ஊடக மொழியாக தாங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடும் ஊடக மொழி காணப்படும்.

05. **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய இல 10/2025 எனும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை II பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 45,230-10×540-11×630-10×890- 10×1,190 - 78,360/- (MN 1-2025) ஆகும். அந்தச் சம்பளம் 2027.01.01 ஆம் திகதிலேயே கிடைக்கும். இந்தச் சுற்றறிக்கையின் அட்டவணை III இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமனம் செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

06. **தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளிகள் வழங்கும் திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்படும்.** (பரீட்சையில் சித்தியடைவதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக் குறைந்த புள்ளிகள் 35 ஆகும்.)

| தொ. இல | விடயம் | புள்ளிகள் | உச்சப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. | **அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள மொழித் தேர்ச்சி** : | | 40 |
| | 01. கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் | | |
| | I. விண்ணப்பதாரியின் ஊடக மொழி சிங்களம் எனின், | | |
| | (i) இரண்டாம் மொழி தமிழ் | | |
| | - A சித்திக்கு | 10 | |
| | - B சித்திக்கு | 08 | |
| | - C சித்திக்கு | 05 | |
| | (ii) ஆங்கில மொழி | | |
| | - A சித்திக்கு | 10 | |
| | - B சித்திக்கு | 08 | |
| | C சித்திக்கு | 05 | |
| | II. விண்ணப்பதாரியின் ஊடக மொழி தமிழ் எனின், | | |
| | (i) இரண்டாம் மொழி சிங்களம் | | |
| | - A சித்திக்கு | 10 | |
| | - B சித்திக்கு | 08 | |
| | - C சித்திக்கு | 05 | |
| | (ii) ஆங்கில மொழி | | |
| | - A சித்திக்கு | 10 | |
| | - B சித்திக்கு | 08 | |
| | - C சித்திக்கு | 05 | |

| | | | |
|---|---|---|---|
| | III. விண்ணப்பதாரியின் ஊடக மொழி ஆங்கிலம் எனின்<br>(i) இரண்டாம் மொழி சிங்களம்<br>- A சித்திக்கு<br>- B சித்திக்கு<br>- C சித்திக்கு<br>(ii) இரண்டாம் மொழி தமிழ்<br>- A சித்திக்கு<br>- B சித்திக்கு<br>- C சித்திக்கு<br><br>02. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் பெற்றுக்கொண்ட ஏற்புடைய மொழி தொடர்பான பாடநெறி<br>- 03 மாதங்களுக்கு குறையாத<br>- 06 மாதங்களுக்கு குறையாத<br>- 01 வருடம் அல்லது அதற்கு மேல்<br>**(இல 02 இன் அதிகபட்ச தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.)** | <br><br>10<br>08<br>05<br><br>10<br>08<br>05<br><br><br><br>05<br>10<br>20 | |
| **02.** | **மும்மொழியிலும் கரும்மாற்றல் தொடர்பில் பெற்றுக்கொண்டுள்ள சேவை அனுபவம்:**<br><br>சேவைக் காலம் 06 மாதங்களுக்கு குறையாத காலப்பகுதிக்கு 05 புள்ளிகள் வீதம்<br><br>(மேற்படி தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அரசாங்க அல்லது தனியார் துறை உத்தியோகத்தர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கும் போது மும்மொழியிலும் பெற்றுக்கொண்டுள்ள சேவை அனுபவத்தை தனது நிறுவனத் தலைவர் மூலம் பெற்றுக்கொண்ட சேவைச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.) | | **30** |
| **03.** | **தகவல் தொழில்நுட்பம் பற்றிய அறிவு**<br><br>அரசாங்க நிறுவனமொன்றில் தகவல்தொழில்நுட்பம் பற்றிய பாடநெறி<br>- 03 மாதங்களுக்கு குறையாத<br>- 06 மாதங்களுக்கு குறையாத<br>- 01 வருடம் அல்லது அதற்கு மேல்<br>**(அதிகபட்ச தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.)** | <br><br><br>05<br>10<br>20 | **20** |
| **04.** | **நேர்முகப் பரீட்சை சபையினால் மொழித்தேர்ச்சியை பரீட்சிப்பதற்கு வினவப்படும் 05 வினாக்கள்**<br><br>நேர்முகப் பரீட்சை சபையினால் மொழித்தேர்ச்சியை பரீட்சிப்பதற்கு வினவப்படும் 05 வினாக்களுக்கும் ஒரு வினாவுக்கு 01 புள்ளிகள் வீதம் | | **05** |
| **05.** | **நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமை மற்றும் ஆளுமைக்கு**<br>I. பொது அறிவு மற்றும் புத்திக்கூர்மை<br>II. மொழிப் பிரயோகம் பற்றிய அறிவு<br>III. தெளிவாக கருத்து வெளியிடும் ஆற்றல் மற்றும் ஆளுமை | <br><br>02<br>02<br>01 | **05** |
| **06.** | **மொத்தம்** | | **100** |

**குறிப்பு** II - தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்டும் சான்றிதழ்களில் ஏற்புடைய காலப் பிரிவுகள் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை எனின், அவ்வாறான சான்றிதழ்களில் ஏற்புடைய காலப்பிரிவுகள் உரிய நிறுவனங்கள் மூலம் எழுத்துமூலம் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டியது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். அவ்வாறு காலப் பகுதிகள் குறிப்பிடப்படாத மற்றும் காலப் பிரிவுகள் உறுதிப்படுத்தப்படாத சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

07. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்:**

தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு எல்லா வித்த்திலும் பூரணமான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் விண்ணப்பதாரி தானே உறுதிப்படுத்திய நிழற் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய அடையாள அட்டை.
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

08. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை**

I. விண்ணப்பங்களை 2026.04.06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "ஆணையாளர் நாயகம், ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம், சுஹுருபாய, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு கிடைக்க கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

II. சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை A4 தாளில் இருபக்கத்தையும் பயன்படுத்தி தயாரித்து முதல் பக்கத்தில் இல. 01 முதல் 08 வரையிலும் இரண்டாம் பக்கத்தில் 09 முதல் 10 வரையில் மூன்றாம் பக்கத்தில் இல 11 முதல் 14 வரையிலும் அமையுமாறு தயாரித்து தனது கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும்.

III. இதனோடுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவுறாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல்போதல் அல்லது தாமதம் அடைதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

IV. விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “இருமொழி எழுதுநர் தரம் III பதவிக்கு விண்ணப்பித்தல்” என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

V. விண்ணப்பத்தில் பரீட்சார்தியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் / சமாதான நீதிவான் / சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு / முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் அல்லது ரூ. 82,150/- அல்லது அதற்கு மேல் மாதாந்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தரொருவர் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

VI. தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தனது விண்ணபத்தை திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

09. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

தாங்கள் சமர்ப்பித்த விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டறியப்பட்டால் தங்களது பரீட்சார்த்த தகைமை இரத்துச்செய்யப்படும். அவ்வாறு பொய்யானது அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் தெரியவருமிடத்து அதற்கு ஏற்புடைய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு சேவை முடிவுறுத்தப்படும் / பதவி நீக்கம் செய்யப்படும்.

10. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்ளுக்கு மத்தியில் ஏதேனும் முரண்பாடு அல்லது பொருந்தாமை எழுமிடத்து சிங்கள மொழி வாசகம் மேலோங்கும்.

11. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் அல்லது ஆட்சேர்ப்புச் செயன்முறையில் ஏதேனும் சிக்கல் நிகழுமிடத்து அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளர் நாயகத்திற்குரியது.

12. விண்ணபத்தை drp.gov.lk இணையத்தளம் ஊடாகவும் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

ஆணையாளர் நாயகம்
ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்

2026 பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி
ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்
பத்தரமுல்லை.